**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**OS No.1/2021**

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of DW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசந்திரன் | தந்தை பெயர் | குட்டையகோனார் |
| கிராமம் | பல்லவராயன்பட்டி | தாலுகா | கந்தர்வகோட்டை |
| வயது | 70 | தொழில் | விவசாயம் |

நாள் : 16.10.2025

பி.வா.சா.1

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் நான் விபரம் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் இடத்தில் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். யார் இடத்தில் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் பாகத்தில் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கும் எனது சகோதரரான வாதிக்கும் இடையே, ஏற்கனவே பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, கூட்டுக்குடும்ப சொத்தாக உள்ளது. எனக்கும் எனது சகோதரரான வாதிக்கும் இடையே, ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில், ஏற்கனவே பாகப்பிரிவினை செய்யப்பட்டு அதில், நானும் வாதியும் கையொப்பம் செய்துள்ளோம் என்றாலும் நான் வழக்கிற்காக அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் இடையே, 13.05.1994 ஆம் தேதி, பாகப்பிரிவினை ஏற்பட்டு, பாகப்பிரிவினை ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஊர் பஞ்சாயத்தார்கள் மேற்படி தேதியில், வங்கியில் கடன் பெறுவதற்காக மட்டுமே அவ்வாறு பாகப்பிரிவினை செய்து விட்டார்கள். எனது அக்கா பழையாத்தாள் என்பவருக்கு பங்கு கொடுக்கவில்லை என்பதால் அவர் கையொப்பம் செய்யவில்லை. இதைத்தவிர வேறு கூட்டுக்குடும்பச் சொத்துக்களும் உள்ளது. நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அக்கா பழையாத்தாள் என்பவருக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1966 ஆம் ஆண்டு திருமணம் ஆனது. அப்போது எனக்கு வயது 12 இருக்கும். எனக்கு அப்போது 26 வயது என்றாலும் 12 வயது என பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. தற்போது எனக்கு வயது 72 ஆகும்.

3) வாதி 30.05.1974 ஆம் தேதி, அவருடைய சுய வருமானத்தைக் கொண்டு சர்வே எண் 302/1 இல் கண்ட சொத்தினை வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் வாதி கூட்டுக்குடும்பத்தில் மூத்தவராக இருந்ததால், அப்போது வயதான நிலையில் இருந்த எனது தந்தை சொன்னதன் அடிப்படையில் வாதியின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் மூலம் வாதி மரவியாபாரம் மற்றும் விவசாய வருமானத்தைக் கொண்டு, அவரது சுய சம்பாத்தியத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் சரியல்ல. வாதிக்கு 1974 ஆம் ஆண்டு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 55 அல்லது 60 வயது இருக்கும். அப்போது வாதி மரவியாபாரம் செய்து வந்தார் என்றால் சரியல்ல, விவசாயம் தான் செய்து வந்தார். அப்போது வாதி, பல்லவராயன்பட்டி கிராம பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் போர் அமைப்பதற்கு, வாதி புதுநகர் இந்தியன் வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்றால் கூட்டுக்குடும்ப சொத்திற்காக கடன் பெறப்பட்டு, கூட்டுக்குடும்ப சொத்தில் இருந்து கடன் அடைக்கப்பட்டது. கூட்டுக்குடும்ப சொத்திற்காக கடன் பெறப்பட்டிருந்தால் வங்கியில், என்னையும் கடன் ஆவணத்தில் சேர்த்திருப்பார்கள் என்றால் வங்கியில் கடன் பெறுவதற்காக தான் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது.

4) 1994 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொள்ளப்பட்டு, "அ" அட்டவணை சொத்து வாதிக்கும் "ஆ" அட்டவனை சொத்து எனக்கும் ஒதுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் எங்கள் இருவருக்கும் தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டு, தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதி எந்த வருடம் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 2021 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில், நான் பிரச்சினை செய்தால் தான், வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு பாகம் கொடுக்க முடியாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி எனக்கு பாகம் கொடுக்கமுடியாது என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் இடைஞ்சல் செய்ததால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் பாகப்பிரிவினை நடந்ததை மறைத்து, பாகப்பிரிவினை கோரி எதிர் கோரிக்கை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) எதிர்கோரிக்கை வழக்கிற்கு யார் விபரம் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். நான் எதிர் கோரிக்கையில், எனக்குரிய பாக சொத்திற்கு, ரூ.2,94,475/- என மதிப்பு போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மதிப்பு கொண்ட சொத்திற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் வாதி கிரையம் பெற்ற சொத்துக்களையும் சேர்த்து தாவா

சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனது தந்தை வயதானவராக இருந்ததால், வழக்கு சொத்துக்களும் வாதி பெயரில் வாங்கப்பட்டது. நான் பொறுப்பு இல்லாமல் இருந்து வந்ததால், வாதி அவருடைய செல்வாக்கை பயன்படுத்து எனக்கு சத்துணவு அமைப்பாளராக வேலை பெற்று கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் கூட்டுக்குடும்ப வருமானத்தை பெற்று வந்தேன் என்றாலும் நான் கூட்டுக்குடும்பத்திற்கு இதுநாள் வரை எந்த செலவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

6) எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 20.11.1991 ஆம் தேதி இறந்தார். எனது சகோதரி 1962 ஆம் ஆண்டு, கறம்பக்குடி தாலுகா, காடாம்பட்டி கிராமத்தில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் 1966 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றதாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அவரது திருமணத்திற்கு எனது சகோதரர் தான் செலவு செய்தார் என்றாலும் நான் எந்த செலவும் செய்யவில்லை என்றாலும் சரிதான், நான் அப்போது படித்து கொண்டிருந்தேன். நான் அதை மறைத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**